## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.16/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தினகரன் | மதம் | : இந்து |
| த/பெ | : நரசிம்மலு | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**25.07.2025**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு புல எண் தெரியுமா என்றால் புல எண்.153/4ஐ ஆகும். வழக்கு நான்கு எல்லை விவரம் தெரியுமா என்றால் வடக்கே தெரு, மேற்கே ரங்கசாமி இடம், கிழக்கே ரங்கசாமி காலியிடம், தெற்கே புல எண்.153/4J ஆகும். மேற்படி நான்கு எல்லைக்குட்பட்ட சொத்தின் விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. நான் குடியிருக்கும் வீட்டின் எண் என்ன என்றால் 160 ஆகும். நான் குடியிருக்கும் வீட்டின் மின் இணைப்பு என் தெரியுமா என்றால் மெத்து வீட்டிற்கு கதவு எண் இன்னும் போடவில்லை. வீட்டு எண்.160A ஆகும். மின் இணைப்பு எண்.982 ஆகும். நான் குடியிருக்கும் மெத்து வீட்டின் பட்டா என்வசம் உள்ளது என்றால் ஆமாம்.

2. நான் குடியிருக்கும் வீடு நான் கிரையம் வாங்கியதா பூர்வீக சொத்தா என்றால் என் பூர்வீக சொத்தாகும். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. வழக்கு சொத்தின் பட்டா பெயரில் உள்ளது என்றால் ரங்கசாமி பெயரில் உள்ளது. ரங்கசாமி உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. ரங்கசாமியின் வாரிசுகள் தெரியுமா என்றால் மனோன்மணி, கோவிந்தன், திலகா, வெங்கடேசன், சரசா, கௌரி, ரேவதி, ஆறுமுகம் ஆகும். ரங்கசாமியின் மனைவி ராஜம்மாள் உயிருடன் உள்ளாரா

என்றால் 2018லேயே இறந்துவிட்டார். மேற்படி ரங்காமியின் வாரிசுகள் இடையே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆகவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தது என்றால் ஆமாம்.

3. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தை வாய்கரலாக கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளதில் அதை எந்த தேதியில் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்பதை நான் சொல்லவில்லை என்றால் அதை கேட்கவில்லை. எனவே சொல்லவில்லை. எனது முன்னோர்கள் தாவா சொத்தில் இருந்தார்கள் என்பதை காட்ட எனது முன்னோர்கள் பெயரில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அப்பா பெயரில் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா, பாட்டி பெயரில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி மட்டும் கொடுத்துள்ளேன். நான் குடியிருக்கும் வீடு அரசாங்கத்தில் கொடுத்ததா அல்லது நான் கட்டியதா என்றால் நான் கட்டியதாகும். அது அரசாங்கத்தில் உதவி பெற்று கட்டவில்லை என்றால் சரிதான். எந்த வருடம் கட்டியது என்றால் 2017ல் ஆரம்பித்து 2020ல் முடித்தேன்.

4. எனது பிராதிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் விக்கிரைய ஒப்பந்தம் இருப்பதாக சொல்லியுள்ளதில் தேதி, மாதம், வருடம் மற்றும் யார் யாருக்கு எழுதியது என்ற விவரம் சொல்லவில்லை என்றால் 2004ம் வருடம் என்ற விவரம் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.12/2019 வழக்கு 07.07.2025ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் என் வழக்கறிஞர் என்னிடம் அதைபற்றி சொல்லவில்லை. நான் அவ்வாறு எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் விக்கிரைய ஒப்பந்தம் எந்த தேதி, மாதம், வருடத்தில் யார் யாருக்கு எழுதியது என்ற விவரம் சொல்லவில்லை என்றாலும் நான் சொல்வதுபோல் கிரைய ஒப்பந்தமே இல்லை என்றாலும் சரியல்ல.

5. நான் குடியிருக்கும் வீட்டின் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் 982 ஆகும். தாவா சொத்தின் மின்இணைப்பு 267 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 எந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் தாவா சொத்திற்குரியதாகும். பி.வா.சா.ஆ 1 யார் பெயரில் உள்ளது என்றால் ரங்கசாமி பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ 1 யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என் அம்மா ராணிக்கு கொடுக்கப்பட்டது.

அதில் உள்ள வீட்டு வரி எண் என்னவாக உள்ளது என்றால் 160 என உள்ளது. அதன் பழைய எண்.159 ஆக இருந்தது. பி.வா.சா.ஆ 4 என்ன வரி விதிப்பு எண் என்னவாக உள்ளது என்றால் 89 ஆக உள்ளது. பி.வா.சா.ஆ 6ல் வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. பி.வா.சா.ஆ 7ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 149 ஆகும். பி.வா.சா.ஆ 5ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 89 ஆகும். பி.வா.சா.ஆ 8ல் வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளதா என்றால் 144 என காட்டப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 9ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 155 ஆகும். பி.வா.சா.ஆ 10ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 155 ஆகும். பி.வா.சா.ஆ 11ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 155 ஆகும். பி.வா.சா.ஆ 12ல் என்ன வரி விதிப்பு எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 134 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் பி.வா.சா.ஆ 4 முதல் 12 ஆவணங்களில் உள்ள வீட்டு வரி எண்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது பஞ்சாயத்து கணக்குகளை பார்த்தால்தான் தெரியும். பி.வா.சா.ஆ 1ல் வீட்டு வரி விதிப்பு எண் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

7. ராணிக்கு வழக்கு சொத்திற்கு அருகில் தமிழக அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டு மனை என்றுதான் எனது எதிர்வழக்குரை பத்தி 4ல் பி.வா.சா.ஆ 1 ஆவணம் பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்களுக்கு மாறாக பி.வா.சா.ஆ 1 ஆவணம் வழக்கு சொத்திற்குரியது என் நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையை நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் ஆமாம். தாவா சொத்து எனக்கு முன்னோர்களுக்கு பாத்தியம் என்றும் எனக்கு வாய்கரால் கிரையம் என்றும் கிராம நத்தம் என்றும் வெவ்வேறு எதிர்வாதம் செய்வதில் எது உண்மை என்றால் 3 தலைமுறையாக கிராம நத்தத்தில் நாங்கள் குடியிருக்கிறோம் என்பதுதான் உண்மை.

8. வழக்கு சொத்து உள்ள இடம் முழுவதும் பழுதடைந்து இடிந்து விழுந்த நிலையில் உள்ளது என்றால் தற்போது 3 வருடமாக அவ்வாறு உள்ளது. வாதி வீட்டின் முன்பு தாவா சொத்து உள்ளது என்றால் ஆமாம். 07.08.2018ல் ரங்கசாமியின் வாரிசான

வெங்கடேசன், ரேவதி ஆகியோரிடம் இருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரிந்துதான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் அதற்கு முன்பே 2004ல் பதிவு செய்யாத கிரையம் பெற்றோம். நான் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் ஆவணமே தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கிரையம் பதிவு செய்ததை தெரிந்து நான் வழக்கு தாக்கல் செய்யும்போது அந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன். வாதி பெற்ற கிரையம் செல்லாது என நான் தாக்கல் செய்த வழக்கில் பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் ஆமாம். அந்த பரிகாரமும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதை என் வழக்கறிஞர் என்னிடம் சொல்லவில்லை.

9. வாதி வழக்கு சொத்தை கிரையத்தின் அடிப்படையில் அனுபவிக்கும்போது 10.11.2018ல் நான் தகராறு செய்தேன் என்றால் அவர்கள்தான் தகராறு செய்தார்கள். ரங்கசாமி பெயரில் உள்ள கிராம நத்த பட்டா என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அசல் பட்டாவை வைத்துதான் வாதிக்கு பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனவே வாதி முறையாக அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டதே இல்லை என்றாலும் அது எனது அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணமே இல்லை என்றாலும் சரியல்ல. நான் பொய்யாக திரித்து கூறி நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)